<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 17/2021**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>

<u>வாக்குமூலம் – வா.சா–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உமா மகேஸ்வரி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் நாள் சாட்சியம்.

---

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 20.09.1956 தேதியிட்ட சுப்பையகவுண்டர் மற்றும் அவரது சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட பாகசாசனப்பத்திரம் சான்றிட்ட நகல்.

2. 26.09.1979 தேதியிட்ட சுப்பையகவுண்டர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்.

3. 05.05.1980 தேதியிட்ட சுப்பையகவுண்டர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்.

4. 15.09.1998 தேதியிட்ட சுப்பையகவுண்டர் மற்றும் அவரது மகன்களுக்கிடையில் ஏற்பட்ட பாகசாசனப்பத்திரம் சான்றிட்ட நகல்.

5. 05.11.2007 தேதியிட்ட சுப்பையகவுண்டரின் இறப்புச் சான்றிதழ் உண்மை நகல்.

6. 06.12.2007 தேதியிட்ட சுப்பையகவுண்டரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல்.

7. 27.03.2014 தேதியிட்ட ஈஸ்வரனின் இறப்புச் சான்றிதழ் சான்றிட்ட நகல்.

8. 13.08.2014 தேதியிட்ட ஈஸ்வரனின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல்.

9. 01.07.2014 தேதியிட்ட பழனிசாமியின் இறப்புச் சான்றிதழ் உண்மை நகல்.

10. 03.10.2014 தேதியிட்ட பழனிசாமியின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல்.

11. 21.12.2020 தேதியிட்ட என்னால் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல்.

12. பிரதிவாதிகளின் கையெழுத்திடப்பட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டை (5 எண்ணிக்கை) அசல்.

13. 09.09.2020 தேதியிட்ட வழக்கு சொத்திற்கான சிட்டா பதிவவேடு இணையதள பதிவிறக்க நகல்.

ஆகியவற்றை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.10.16 18:15:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.